**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 26.03.2026**
**OS. No. 66/2023**
**வழக்கு சாட்சி PW.1– ரமேஷ், த/பெ.மாரிசெட்டி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என் நிரூபண வாக்குமூலத்திலுள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். எங்களின் கிணற்றை பிரதிவாதிகள் மூடக்கூடாது என்று கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவாவில் வழக்கு சொத்தாக ச.எண்.282/4J என்ற சொத்தை காண்பித்துள்ளோம். தாவா சொத்தாக சொல்லியுள்ள ச.எண்.282/4 ல் கண்ட 1 ஏக்கர் நிலத்தை குறித்து எனக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணை குறித்தும், சொத்தை குறித்தும் இந்த வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல.

2) தாவா சொத்து ஆரம்பத்தில் என் பாட்டி மல்லக்காளுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். என் பாட்டி மல்லக்காளுக்கு நான்கு ஆண் பிள்ளைகள் மற்றும் நான்கு பெண் பிள்ளைகள் ஆகும். அதில் நான்கு ஆண் பிள்ளைகளின் பெயர்கள் மோகன், மாரிசெட்டி, கோபால், கோவிந்தராஜ் ஆகும். என் பாட்டி மல்லக்காளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் மேற்கண்ட நாலு ஆண் பிள்ளைகளும் பேரன்களுக்கு பிரித்து கொடுத்தார்கள்.

3) நான் மேற்படி மாரிசெட்டியின் மகன் என்றால் சரிதான். 2ம் வாதி மேற்கண்ட மோகன் அவர்களின் மகன் ஆவார். 1ம் பிரதிவாதி என் பாட்டியின் மூத்த மகன் ஆவார். 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகன்கள் என்றால் சரிதான். என் பாட்டி மல்லக்காளின் மற்றொரு மகன் கோபாலை தான் 4ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன்

என்றால் சரிதான். 5ம் பிரதிவாத சுரேஷ் என்பவர் 4ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான்.

4) என் பாட்டி மல்லக்காள் எனக்கும், 5ம் பிரதிவாதி சுரேசுக்கும் தனித்தனியாக சொத்துக்களை குறிப்பிட்டு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு வா.சா.ஆ1 உயிலை தான் என் பாட்டி 27.06.1988ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிக்கு நான்கு நாட்கள் கழித்து 04.07.1988ல் என் பாட்டி உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயில் தான் 5ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **அந்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) வா.சா.ஆ1 உயில் ஆவணத்தில் நான் வழக்கில் காண்பித்துள்ள 1 ஏக்கர் நிலம் குறித்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான், மேலும் கிணறு குறித்தும் எழுதி வைத்துள்ளார். அதன் சர்வே எண்.282/4 என்றால் சரிதான். என் பாட்டி மல்லக்காள் பெயரிலுள்ள மேற்கண்ட சொத்து குறித்த ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என் பாட்டி மல்லக்காள் பெயரிலுள்ள 21.09.1979 தேதியிட்ட கிரைய பத்திரம் என்றும், அதன் பத்திர எண்.1614 என்றால் சரிதான். **அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

6) பி.வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்தில் எங்கும் கிணறு குறித்து காண்பிக்கவில்லை என்றும், அதில் ச.எண்.282/4J குறித்தும் தனிபிரிவு காண்பிக்கப்படவில்லை என்றால் அந்த ஆவணத்தில் அது குறித்து வராது. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் எனக்கு கிரையப்படி பாத்தியப்பட்டது என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் மூல ஆவணங்கள் குறித்து எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் பாட்டிக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான். அவர் கைரேகை மட்டும் தான்

வைப்பார் என்றால் சரிதான். என் பாட்டியை என் தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் தான் அழைத்து சென்று உயில் எழுதவைத்திருப்பார்கள் என்றால் இருக்கலாம்.

7) ச.எண்.282/4Jல் கண்ட சேந்துகிணறு என்று சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ள கிணற்றின் நீளம், அகலம், ஆழம் மற்றும் சுற்றளவு ஆகிய அளவுகள் குறித்து விவரங்கள் எதுவும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். ச.எண்.282/4Jன் மொத்த பரப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த சொத்து எத்தனை நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் 5ம்பிரதிவாதிக்கு மட்டும் தான் உயில் மூலம் பாத்தியம். ச.எண்.282/4J ஆனது தற்போதும் அதன் பரப்பளவு மாறாமல் நிலையில் உள்ளது என்றால் சரிதான்.

8) பி.வா.சா.ஆ–1 உயில் ஆவணத்தில் ச.எண்.282/4 சொத்தை தான் 5ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி பெயரில் தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.2636 என்பது தான் 5ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட தனிப்பட்டா என்றால் சரிதான். **அந்த பட்டா எண்.2636 கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் ச.எண்.282/4J2 என்று சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) பி.வா.சா.ஆ.1 உயில் எழுதப்பட்ட பிறகு அந்த உயில் நடைமுறைக்கு வந்தபின் 5ம் பிரதிவாதிக்கு மேற்கண் பி.வா.சா.ஆ.3 பட்டாவானது அதன்படி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.282/4J2 பொறுத்து எனக்கு எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். சேந்துகிணறு என்பது மக்கள் பொதுவாக கையிறு கட்டி வாளியில் தண்ணீர் எடுப்பது என்றால் சரிதான். ச.எண்.282/4J என்ற பகுதி எனக்கு உயில் எழுதி வைத்த மல்லக்காளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது குறித்த விவரம் குறித்து என் வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

10) என்னிடம் காட்டப்படும் புலவரைபடம் தான் ச.எண்.282ல் கண்ட எங்கள் சொத்து அடங்கிய புலவரைபடம் என்றால் சரிதான். **அந்த புலவரைபடம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த வரைபடத்தில் ச.எண்.282/4J ஆனது தனித்தனியாக உட்பிரிவு செய்யப்பட்டவாறு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி நிலமான ச.எண்.282/4J2க்கு கிழக்குபுறமாக ஒரு வீதி செல்கிறது என்றால் எனக்கு தெரிந்து ச.எண்.282/4க்கு கிழக்குபுறம் செல்கிறது, அதேபோல் ச.எண்.282/4 க்கு வடக்கு புறமாக பஞ்சாயத்து ரோடு செல்கிறது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 09.04.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.